# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 193/2018 | Date : 02.02.2023 | PW1 |
|---|---|---|
| Name: நடராஜன் | S/o. வீரன் (எ) வீராக்கவுண்டர் | |
| Evidence Recorded Time: 03.41 P.M. to 04.10 P.M | | |

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

இறந்துபோன வீராக்கவுண்டருக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கணக்கு இருந்தது தெரியுமா என்றால் தெரியும். அந்த கணக்கு எண்.26907 என்றால் அதுபற்றி தெரியவில்லை. ஜம்பு இறந்தபின்பு கமலா 25 சதவீத பென்சன் வாங்கி வருகிறார் என்றால் பென்சன் வாங்கி வந்தது தெரியும், ஆனால் எவ்வளவு பென்சன் என்று தெரியாது. கமலா இறந்தபின்பு வீராக்கவுண்டர் எனக்கு ஆதரவு இல்லாததால் அந்த ராணுவன பென்சனை தனக்கு தரவேண்டும் என்று வாங்கிகொண்டார் என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும் Pay order No.F002/2013 என்ற உத்தரவின் அடிப்படையில் பென்சன் பெற்றுவந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. 15.03.2015-ல் வீராக்கவுண்டர் இறந்தவிட்டார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறுதலுக்கான உத்தரவை மேட்டுர் வட்டாட்சியர் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். 01.10.2014-ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு பி.வா.சா.ஆ.2 ஆகும். அது மோசடியாக பெற்றுள்ளார்கள். வீராசாமி இறப்பதற்கு முன்பே பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பட்டா மாறுதல் மேற்சொன்ன வீராசாமி உயிருடன் இருக்கும்போதே மாற்றம் செய்யப்பட்டது என்றும் நான் சொல்வது போல வீராசாமியின் சொத்தாக அது இருந்தால் பட்டா மாறுதல் குறித்து ஆட்சேபனை செய்திருப்பார் என்றால் சரியல்ல, அவரை ஏமாற்றி பெறப்பட்டுள்ளது. வீட்டு வரி ரசீது, குடிநீர் கட்டணம் ஆகியவை 3, 4 பிரதிவாதிகளின் பெயர்களில் ஏற்பட்டுள்ளது என்றால் இல்லை. பட்டா மாறுதல் சம்மந்தமாக நான் எந்த மனுவும் கொடுக்கவில்லை. 3, 4 பிரதிவாதிகள் பெயரில் 2014-ம் ஆண்டு பட்டா மாறுதல் செய்த பிறகு வீராசாமி எந்த தேதியில் ஆட்சேபனை மனு கொடுத்தார் என்றால் தேதி, மாதம் நினைவில்லை, 2014-ம் ஆண்டில் கொடுத்தார். வீராசாமி அவ்வாறு எந்த ஆட்சேபனையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல வீராசாமி உயிருடன் இருக்கும் போதே 3, 4 பிரதிவாதிகள் பெயரில் வீட்டு வரி, குடிநீர் கட்டண ரசீது ஆகியவற்றை மாற்ற ஆட்சேபனை இல்லை என்று கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, உயிருடன் இருக்கும் காலம் வரை அவர் பெயரில் தான் மேற்படி கட்டணங்களை செலுத்தி வந்தார். தாவா சொத்தில் ஜம்பு இறந்தபின்பு இறுதி சடங்குகள் செய்தார்கள் என்றால் எல்லோரும் சேர்ந்துதான் செய்தோம். அந்த இறப்பில் நான் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஜம்பு இறந்த பின்பு தயார் என்ற முறையில் கமலாவும், வீராசாமியும் குயிருந்து அவர்களுக்கு பின்பு 3, 4

பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் அனைவரும் ஒன்றாகத்தான் குடியிருந்தோம். அவ்வாறு ஒன்றாக குடியிருந்தற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. இன்று வரையிலும் இறந்து போன ஜம்புவிற்கு கமலா இறந்துபோன பிறகு 3, 4 பிரதிவாதிகள்தான் வாரிசு என்ற அடிப்படையில் 3, 4 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் இல்லை. பட்டாவை ரத்து செய்ய சொல்லி உரிய வட்டாட்சியரிடம் மனு கொடுக்காமல் உள்ளேன் என்றாலும், வழக்கில் வட்டாட்சியரை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான். வீராக்கவுண்டருக்கு 3ம் பிரதிவாதிதான் மாதந்திர தொகையாக முதலில் மாதம் ரூ.2000/மும் பின்பு மாதம் ரூ.5000/-மும் கொடுத்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. வீராக்கவுண்டர் இறப்பதற்கு முன்பு அவர் மேட்டுர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான். அன்புவின் மகன் வசந்த் பட்டாளி மக்கள் கட்சியில் பொறுப்பில் உள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. வசந்த் என்பவர் வீராசாமியை தாவா சொத்து ஆவணங்களை கேட்டு அடித்ததால்தான் அவர் மருத்தவமனையில் சேர்ந்த பின்னர் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 4-ம் பிரதிவாதியை வசந்த் மிரட்டியது தொடர்பாக 3-ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கோ, 1, 2 பிரதிவாதிகளுக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ஜம்புவிற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதாலும் ஜம்புவின் இறப்பிற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகளான 3, 4 பிரதிவாதிகளுக்குதான் பாத்தியப்பட்டது என்றாலும் நான் ஜம்புவின் வாரிசு இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் உயிலிலே வீராசாமி ஒரே மகன், ஒரே மனைவிதான் என்று கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல நான் அவரின் வாரிசாக இருந்திருந்தால் உயில் ரத்து பத்திரத்தில் மற்ற வாரிசுகள் பற்றி குறிப்பிட்டிருப்பார் என்றால் சரியல்ல. வீராக்கவுண்டர் இறந்தபிறகு ஒரு மாதம் கழித்து அவருடைய சகோதரி நஞ்சம்மாள் என்பவர் மோச விளக்கு வைக்கவேண்டும் என்று அனுமதி கேட்டதன் அடிப்படையில் 3, 4 பிரதிவாதிகள் அனுமதி கொடுத்தன் பேரில் மோட்ச விளக்கு வைத்தார் என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி வேலைக்கு சென்ற பிறகு நஞ்சம்மாள் 3-ம் பிரதிவாதிக்கு சொந்தமான நகைகள், பொருட்களை திருடி சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக 3-ம் பிரதிவாதி பராசக்தி கருலைக்கூடல் காவல் நிலையத்தில் 14.06.2015-ல் புகார் கொடுத்தார் என்றாலும் அந்த விசாரணையில் நாங்கள் எந்த இடையூறும் செய்யமாட்டோம் என்று எழுதிக்கொடுத்துவிட்டு சென்றோம் என்றாலும் சரியல்ல. காவல் நிலைய விசாரணையில் சொத்து சம்மந்தமாக ஆவணங்களை ஒப்படைப்பதற்கு காலஅவகாசம் கேட்டு சென்றுவிட்டு எந்த விதமான ஆவணங்களும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு நான், அன்பழகன், வசந்த்குமார் ஆகியோர் 3, 4 பிரதிவாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு கொடுத்தால்

எங்களுக்கு எதிராக புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வாரிசு சான்று கேட்டு விண்ணப்பம் கொடுத்தால் வாரிசு சான்று கொடுக்க கூடாது என்று 3, 4 பிரதிவாதிகள் மனு கொடுத்துள்ளார்கள் என்றாலும் எங்களுக்குள்ள அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி 3, 4 பிரதிவாதிகளை விட்டுவிட்டு மோசடியாக ஒரு வாரிசு சான்றிதழை பெற்றோம் என்றாலும் சரியல்ல. அதன்பின்னிட்டும் தாவா சொத்தில் 3, 4 பிரதிவாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வந்ததால் கருமலைக்கூடலில் உள்ள வேறு ஒரு வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை 3, 4 பிரதிவாதிகள் எங்களிடம் விலைக்கு கேட்டார்களா என்றால் இல்லை. தாவா சொத்தை விற்பனை செய்வதாக 3, 4 பிரதிவாதிகள் தெரிவித்தார்களா என்றால் இல்லை. வழக்கில் பொய்யான சங்கதிகளை சொல்லி 3–ம் பிரதிவாதிகணவர் இறந்துவிட்டதாலும், வீராக்கவுண்டர் உயிருடன் இல்லாத காரணத்தினாலும், 3–ம் பிரதிவாதியிடம் இருந்து சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யகா சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மோசடியான ஆவணங்கள் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.